DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 7/2019**

Deposition of Witness for Prosecution : P.W. 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குலோத்துங்கன் | தகப்பனார் பெயர் | : | சங்கர் |
| ஊர் | : | தஞ்சாவூர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| ஜாதி | : | -- | வயது | : | 60 |
| மதம் | : | -- | தொழில் | : | காவல் ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 16.08.2022.

**முதல் விசாரணை**

நான் திருவாரூர் மாவட்டம் தனிபிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 30.04.2020 ல் பணி ஓய்வு பெற்று தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். கடந்த 12.02.2018ம் தேதி நாகூர் வட்ட ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது, திட்டசேரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மணிமேகலை என்பவரால் வழக்கு பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 44/2018 ச/பி 302 இ.த.ச வழக்கு கோப்பை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு உடனே சம்பவ இடமான அருண்மொழிதேவன் கிராமத்திற்கு காலை 10.30 மணி அளவில் சென்று சாட்சிகள் மதியழகன் மற்றும் சுபாஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வரைபடம் அ.சா.ஆ.12 ஆகும். பின்னர் சாட்சிகளிடம் அவற்றில் கையொப்பம் பெற்று காலை 11.00 மணி அளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து ரத்தம் தோய்ந்த மண் கொஞ்சம், ரத்தம் தோயாத மண் கொஞ்சம், மேலும் பிரேதத்தின் அருகில் நீலம் வெள்ளை கட்டம் போட்ட மேல் சட்டை எரிந்து போனதும், கருகிய நிலையில் உள்ள துண்டுகள் கொஞ்சம் ரத்த கறை உள்ளது, மேலும்

ரூ.50/- நோட்டு பாதி எரிந்த நிலையில் உள்ளது, அந்த ரூபாய் நோட்டு நம்பர் 6AM051475 ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றியும், மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரத்தம் தோய்ந்த மண் கொஞ்சம், ரத்தம் தோயாத மண் கொஞ்சம் ஏற்கனவே அ.சா.பொ. 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரேதத்தின் அருகில் நீலம் வெள்ளை கட்டம் போட்ட மேல் சட்டை எரிந்து போனதும், கருகிய நிலையில் உள்ள துண்டுகள் கொஞ்சம் ரத்த கறை உள்ளது அ.சா.பொ. 8 ஆகும், மேலும் ரூ.50/- நோட்டு பாதி எரிந்த நிலையில் உள்ளது ஏற்கனவே அ.சா.பொ. 7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சாட்சிகளிடம் அவற்றில் கையொப்பம் பெற்று தனி தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரேத விசாரணை காலை 11.30 மணிமுதல் 13.00 வரை சம்பவ இடமான அருண்மொழிதேவன் கிராமம், நரி தின்னவாய்க்கால் என்கிற சின்னவாய்க்கால் வரப்பில் பஞ்சாயத்தார்கள் 1) பன்னீர் செல்வம் 2 )கதிரவன் 3) ஜெயச்சந்திரன் 4) பிரகாஷ், 5) பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னியலையில் 1) கார்த்திகேயன் 2)கந்தவேல் 3)மனோகரன் 4) ஈஸ்வரி 5) காமராஜ் ஆகியோர்களை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 13 ஆகும். பிரேத விசாரணை முடிக்கப்பட்டு திட்டசேரி முதல் நிலை காவலர் 1299 கணேஷ் என்பவர் பொறுப்பில் பிரேதத்தை ஒப்படைத்து பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்துடன் நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் புகார்தாரரான பரமேஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நாகை அரசு தலைமை மருத்துவமனையில் 16.30 முதல் 17.30 மணிவரை நடைபெற்ற பிரேத பரிசோதனையில் உடல் உள் உறுப்புகளை பரிசோதனைக்கு சேகரித்து பரிசோதனை முடிந்து பிரேதத்தை உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வழக்கில் தேடப்பட்ட எதிரி ஹரிஹரன் மற்றும் கீதா அருண்மொழிதேவன் கிராம நிர்வாக அலுவலகத்தில் ஆஜர் ஆகி இருப்பதாக கிராம நிர்வாக அலுவலர் பரமேஸ்வரன் என்பவர் எனக்கு கொடுத்த தகவலின் பேரில்

நான் உடனே 17.45 மணிக்கு அருண்மொழி தேவன் கிராம நிர்வாக அலுவலகம் வந்தும், கிராம நிர்வாக அலுவலர் பரமேஸ்வரனிடம் எதிரிகள் ஹரிஹரன் மற்றும் கீதா ஆகியோர் ஆஜராகி கொடுத்த வாக்குமூலம், கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை, எதிரிகள் ஹரிஹரன் மற்றும் கீதா ஆகியோரை ஆஜர் செய்தார். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கை அ.சா.ஆ. 14 ஆகும். நான் மேற்படி எதிரிகளை பெற்றும் விசாரித்தும் 12.02.2018ம் தேதி 18.15 மணிக்கு கிராம நிர்வாக அலுவலகத்தில் எதிரிகளை காரணம் கூறி கைது செய்தும், எதிரி ஹரிஹரன் எந்த வித துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து 18.30 மணிக்கு சாட்சிகள் பரமேஸ்வரன் மற்றும் செந்தில் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் 2வது எதிரி கீதா என்பவர் எந்த வித துன்புறுத்தலும் இன்றி தானாக அதே இடத்தில் 19.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரி ஹரிஹரன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில், தன்னை அழைத்து சென்றால் சம்பவ இடத்தையும், சம்பவத்திற்கு பயன்படுத்திய கைகோடாலியும், இருசக்கர வாகனத்தையும் மறைத்து வைத்திருக்கிற இடத்தை காண்பித்து ஆஜர் செய்வதாக கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ. 4 ஆக குறியீட செய்யப்பட்டுள்ளது. எதிரி ஹரிஹரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் வீட்டிற்கு பின்புறம் அழைத்து சென்று சாட்சிகள் பரமேஸ்வரன் மற்றும் செந்தில் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் படுத்திய தடயங்களான 1) பல்சர் PY02R7332 இரு சக்கர வாகனம் 2) வெளிர் மஞ்சள் வெள்ளை நிற கோடு போட்ட முழு கை சட்டை ரத்த கறை உள்ளது, 3) நீலம், அரக்கு, காவி கலர் உள்ள கோடு கட்டம் போட்ட கைலி ஒன்று ரத்த கறை உள்ளது, 4)கைக்கோடாலி 1 ரத்த கறை உள்ளது ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன. கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பல்சர் PY02R7332 இரு சக்கர வாகனம் அ.சா.பொ. 9 ஆகும்.

வெளிர் மஞ்சள் வெள்ளை நிற கோடு போட்ட முழு கை சட்டை ரத்த கறை உள்ளது ஏற்கனவே அ.சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீலம், அரக்கு, காவி கலர் உள்ள கோடு கட்டம் போட்ட கைலி ஒன்று ரத்த கறை உள்ளது ஏற்கனவே அ.சா.பொ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைக்கோடாலி ஏற்கனவே அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2வது எதிரி கீதா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் தனது வீட்டின் உள்ளே 5லி பிளாஸ்டிக் மண்ணெண்ணெய் கேன், சிவப்பு, சிமெண்ட் கலர் பூ மற்றும் பாடர் உள்ள சந்தன் கலர் புடவை ஒன்று ரத்த கறை உள்ளதை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் அடிப்படையில் அவர் ஊரான ஊழியபத்து கிராம வீட்டிற்கு அழைத்து சென்று, கீதா அவரது வீட்டிலிருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி கீதா எடுத்து ஆஜர் செய்த 5லி பிளாஸ்டிக் மண்ணெண்ணெய் கேன் அதில் சுமார் 1/2 லி டீசல் இருந்தது. 2) சிவப்பு, சிமெண்ட் கலர் பூ மற்றும் பாடர் உள்ள சந்தன் கலர் புடவை ஒன்று ரத்த கறை உள்ளது ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ,7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 5லி பிளாஸ்டிக் மண்ணெண்ணெய் கேன் ஏற்கனவே அ.சா.பொ. 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, சிமெண்ட் கலர் பூ மற்றும் பாடர் உள்ள சந்தன் கலர் புடவை அ.சா.பொ. 10 ஆகும். பின்னர் எதிரிகள் மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்தும், எதிரிகளை திரேக சோதனை செய்து பாராவிடம் ஒப்படைத்தும், மேலும் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் ச/பி 302 இ.த.ச. விலிருந்து 120 (b), 201, 302 இ.த.ச r/w 34 இ.த.ச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்ட மாற்று அறிக்கையை 22.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்ட பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ. 15 ஆகும். இவ்வழக்கின் தடய சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 95 அ.சா.ஆ.16 ஆகும்.

இவ்வழக்கின் புகார்தாரரான பரமேஸ்வரன் என்பவரை மீண்டும் விசாரித்து 13.02.2018 ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சியான செந்தில் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் கோமதி மற்றும் அனுஷ்கா ஆகியோரை 15.02.2018ம் தேதி தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி ஜெய்கணேஷ் என்பவரை 16.02.2018ம்தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி கண்ணன் என்பவரை 16.02.2018ம்தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி ஸ்ரீகாந்த என்பவரை 16.02.2018ம்தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 2ம் நிலை காவலர் 806 பாக்யராஜ் என்பவரை விசாரித்து 16.02.2018ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் தடய சொத்துகளை நீதிமன்ற உத்தரவுபடி முதல் நிலை காவர் 1299 ரமேஷ் என்பவர் மூலம் தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் கூடத்திற்கு 23.02.2018ம் தேதி தடயத்தை ஒப்படைத்தும், பின்னர் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் 07.03.2018ம் தேதி ஒப்படைத்தும் அதற்கான அறிக்கைகள் பெற்றேன். Biology Report அ.சா.ஆ. 17ஆகும், Chemical Report அ.சா.ஆ. 18 ஆகும், Cerology Report அ.சா.ஆ. 19, Viscera Report அ.சா.ஆ. 20 ஆகும். பின்னர் முதல் நிலை காவலர் 1299 ரமேஷ் என்பவரை 08.03.2018ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வு கூட ஆய்வளார் காயத்ரி 23.03.2018ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தடய அறிவியல் துறை சென்னையில் உதவி இயக்குநராக பணிபுரியும் விசாலாட்சி என்பவரை 30.05.2018 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரியும் தரணி என்பவரை 05.06.2018 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்து போன மகேந்திரனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரியும் சரவணக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் குற்றவியல்

நீதித்துறை நடுவர், குற்றவியல் நீதிமன்றம் எண் 2, நாகப்பட்டினம் அவர்கள் உத்தரவுப்படி கு.வி.மு.ச 164(5) ன் படி சாட்சி வாக்குமூலங்கள் 1) கந்தவேல் 2) கார்த்திகேயன், 3) கோமதி 4) அனுஷ்கா ஆகியோரிடம் குற்றவியல் நீதிமன்றம் எண் 2ல் 18.07.2018ம் தேதி வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. (எதிரிகள் தரப்பில் 164(5) ன் படி உள்ள வாக்குமூலங்களை குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கிறார். முரண்பாடு இருக்கும் பட்சத்தில் மட்டுமே அவைகளை குறயீடு செய்யமுடியும். ஒத்திசைவு சாட்சியத்திற்காக குறியீடு செய்ய இயலாது என்று ஆட்சேபிக்கிறார். ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. தீர்ப்பின்போது இது பற்றி முடிவு செய்யப்படும்) சாட்சி கந்தவேல் வாக்குமுலும் அ.சா.ஆ. 21 ஆகும். சாட்சி கார்த்திகேயன் வாக்குமூலம் அ.சா.ஆ. 22ஆகும். சாட்சி கோமதி வாக்குமூலம் அ.சா.ஆ. 23 ஆகும். சாட்சி அனுஷகா வாக்குமூலம் அ.சா.ஆ. 24 ஆகும். அதற்கான CD அ.சா.பொ. 11 ஆகும். திட்டசேரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மணிமேலை என்பவரை 21.07.2018 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து எதிரி 1 ஹரிஹரன் மீது ச/பி 120(b), 302 இ.த.சன் படியும், 2வது எதிரி கீதா மீது ச/பி 120(b) உ/இ 302 இ.த.ச உ/இ 201 இ.த.ச ன் படியும் 21.07.2018 ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்)</u>

எதிரிகள் இருவரையும் நீதித்துறை நடுவர் 2 ல் 13.02.2018 ம் தேதி மாலை 06.00 மணிக்கு தான் ஆஜர் படுத்தப்பட்டு அடைப்புகாவலுக்கு உட்படுத்தப்பட்டார் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவர் தனி அறிக்கை அ.சா.ஆ14 ம் 13.02.2018 ம் தேதிதான் நீதிதுறை நடுவர் எண் 2 க்கு அனுப்பபட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ14 அறிக்கை எனக்கு கிராம நிர்வாக அலுவலர் கொடுத்தது 12.02.2018 ம் தேதி மாலை 06.00 மணிக்கு என்றால் சரிதான். இதற்கு பிறகுதான் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். அவைகள் அ.சா.ஆ. 4 மற்றும் 5 ஆகும். கிராம

நிர்வாக அலுவலர் தனி அறிக்கையில் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட சங்கதிகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். நான் அ.சா.ஆ. 4 மற்றும் 5 ல் சொல்லப்பட்ட சங்கதிகள் புதிய சங்கதிகள் அல்ல என்பதால் சட்ட ரீதியாக ஏற்புடையது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27க்கு எதிரானது என்றாலும் சரியல்ல. இந்த ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர்கள் இவைகள் ஆய்வாளருடைய எழுத்தர் மகாதேவன் அவர்களால் எழுதப்பட்டவையாகும். 161(3) வாக்குமூலங்கள் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டவையாகும், ஆனால் அது யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்ற குறிப்பு இல்லை. பிரேமாவால் தட்டச்சு செய்யப்பட்டது. பிரேமாவை நான் சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவைகள் எல்லாம் காவல் நிலையத்தில் வைத்து நிலைய எழுத்தர் மகாதேவனால் தயாரிக்கப்பட்டது என்றும், நான் நேரடியாக புலன் விசாரணை செய்யவில்லை என்றும், இயந்திர ரீதியாக கையெழுத்து போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் இருவரையும் நான் சொன்ன நேரத்தில், சொன்ன முறையில் கைது செய்யவில்லை என்றும், அவர்கள் எந்த வாக்குமூலமும் என்று சொல்லபடும் ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அ தன் வழியே சான்று பொருள்கள் சட்டை, வேஷ்டி, கோடலி, புடவை, மண்ணெண்ணெய் கேன் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரிகளையும், சாட்சிகள் மனோகரன், கந்தேவேல், கார்த்திகேயன் இவர்களையும் 12.02.2018ம் தேதி சந்தேகத்தின் அடிப்படையில்காவல் நிலையம் அழைத்து சென்று விட்டோம் என்று சொன்னாலும் சரியல்ல. 12.02.2018ம் தேதி கிராம நிர்வாக அலுவலர் பரமேஸவரனை திட்டசேரி காவல் நிலையம் அழைத்து வந்து மாலை வரை வைத்திருந்து வழக்கிற்கு ஏற்ப நான் சொன்ன விஷயதான சங்கதிகளை அவர் அ.சா.ஆ. 14 தனிஅறிக்கையும், மற்றும் ஆவணங்களும், என்னால் சொல்ல சொல்ல பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் வீடு எந்த திசை பார்த்து உள்ளது என்று எனக்கு நினைவில்லை.

நான் அவ்விதம எதிரிகள் வீட்டுக்குபோகவில்லை, தடயங்களை கைப்பற்றவில்லை என்பதால்தான் நான் நினைவில்லை என்று மழுங்கலான பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன மகேந்திரனின் 3 சகோதரர்கள் அவர்களது மனைவிகள், மகேந்திரன் மகள்கள், மற்றும் உறவினர்கள் சாட்சிகளாக போடபட்டுள்ளார்கள். முக்கியமான சம்பவங்கள் குறித்து தனி நபர் சாட்சிகள் யாரும் போடப்படவில்லை என்றால் சரியல்ல. என் புலன் விசாரணையில் தெரிந்து கொண்டது போல் சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் தனி நபர் சாட்சிகள் வழக்கின் முக்கியமாக சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனோகரன், கார்த்திகேயன், கந்தவேல்ஆகியோரை சந்தேகத்தின் அடிப்படையில் 12.02.2018ம் தேதி காவல் நிலையம் அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவருக்கும் தவறான உடல் சார்ந்த உறவுகள் உள்ளதாக பொய்யான சங்கதிகள் அடிப்படையில் சாட்சியம் ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. கீதா, இறந்து போன மகேந்திரன் வாழ்ந்த வீடு கூரைவீடு என்றால் சரிதான். இவர்கள் இருவரும் சார்பு பகுதியில் தான் இருந்தார்கள் என்று சொன்னால் அது சரியே. தவறான உடல் சார்ந்த உறவுகள் எதிரி கீதா இருந்த வீட்டில் நடக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் அது சரியல்ல. ஊழியபத்து கிராமம் பாண்டி மாநிலம், காரைகால் மாவட்டத்தை சேர்ந்தது. சம்பவ இடம் ஊழியபத்து கிராமத்தின் ஒரு பகுதி என்றால் சரியல்ல, அது நாகப்பட்டினம் மாவட்டம். இறந்து போன மகேந்திரன் குடிபோதையில் குப்பை மேடு எரிந்து கொண்டிருந்த இடத்தில் T.V.S வாகனத்தை விட்டு மதகில் மோதி இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையில் மகேந்திரனை கடைசியாக யார் யார் எந்தெந்த இடத்தில் வைத்து பார்த்தார்கள் என்று குறிப்பாக கூறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கை நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும், தவறான சங்கதிகள் அடிப்படையில் எதிரிகளை இறுதி குற்ற அறிக்கையில் சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அ.சா.14 அனுஷ்கா தன்னுடைய விசாரணையில்

அப்பா வந்தால் ரூம் கதவை தட்டு என்று அம்மா சொன்னதாகவும், அம்மா ரூமை விட்டு வந்து யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பார் என்றும் சொல்லவில்லை. அ.சா.12 ஜெய்கணேஷ் என்னுடைய விசாரணையில் மகேந்திரனும், ஹரிஹரனும் சாராயம் வாங்கி போனதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)</u>**

2ம் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பு தனதாக ஏற்றுகொண்டார்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.